**செ.வெ. எண்: 329** **நாள்: 07.06.2012**

தொழில் நுட்பக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் 2012-13 கல்வியாண்டுக்கான முதலாம் ஆண்டு பகுதி நேர பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு வரும் ஜுன் மாதம் 22ம் தேதி முதல் ஜீன் 24ம் தேதி வரை கோயமுத்தூர், தொழில் நுட்பக்கல்லூரியில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி நடைபெறும்.

| தேதி | பிரிவு |
| --- | --- |
| 22.6.2012 | டெக்ஸ்டைல் டெக்னாலஜி (ஜவுளித்துறை) மற்றும் சிவில் இஞ்சினியரிங் (கட்டிடவியல்) |
| 23.6.2012 | மெக்கானிக்கல் இஞ்சினியரிங் (இயந்திரவியல்) |
| 24.6.2012 | எலக்டிரிக்கல் / எலக்ட்ரானிக்ஸ் / கணிணி (EEE / ECE/ CSE) |

மேலும் விபரங்களை **www.tn-dte-ptbe.com** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மாணவ / மாணவியர் தங்களது மதிப்பெண் மற்றும் பணி அனுபவம் பற்றிய சந்தேகங்கள் ஏதுமிருப்பின் ஜீன் மாதம் 9 மற்றும் 10ம் தேதிகளில் கோயமுத்தூர் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை செயல்படும் செயல் அலுவலகத்தில் நேரில் சென்று தெளிவு பெறலாம்.

விண்ணப்பித்துள்ள தகுதியான மாணவர்களுக்கு கலந்தாய்வுக்கான அழைப்புக் கடிதம் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் கிடைக்கப்பெறவில்லையெனினும் தகுதியுள்ள மாணவர்களும் மேற்கூரிய தேதிகளில் அசல் சான்றிதழ்களுடன் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**